www.tamilarangam.net

# ஈழப்புரட்சி அமைப்பு

## 30 ஆண்டுகள்...

நாம் ஈழவர் நமது மொழி தமிழ் நம்நாடு ஈழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★

ஈரோஸின் கடந்த காலச் செயற்பாடுகள் அனுபவங்களில் இருந்து அவற்றை பக்கசார்பற்ற ரீதியில் மீள் சிந்தனைக்கு உட்படுத்தி அவற்றில் இருந்து நடைமுறைக்குச் செல்வது பொருத்தமான காரியமாக அமையும் என்பதால் கடந்தகால நடைமுறைகளை ஓரளவேனும் தொகுத்து இவ்வறிக்கையில் தருவதற்கு முனைந்துள்ளோம். இவ்விடயங்களில் இருந்து மென் மேலும் ஆரோக்கியமான முக்கிய விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு நாம் சுமந்த அரசியல் பாதையை செப்பனிடுவோம் எனக்கருதியதால் இவ்வறிக்கை உருவாகிறது.

www.tamilarangam.net

★

# ஈழப்புரட்சி அமைப்பு (EROS) முப்பதாண்டு நிறைவின் வெளிப்பாட்டு அறிக்கை.

ஈரோஸ் என அழைக்கப்படும் ஈழப்புரட்சி அமைப்பின் வயது முப்பது. 3.1.1975 இல் இலண்டனில் கருவெடுத்து ஈழத்தினுள் கால் பதித்து 03.01.2006 இல் தனது முப்பதாண்டை நிறைவு செய்கிறது.

வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பிரதேசங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களின் விடுதலை தேசிய இனப்பிரச்சனையின் கூர்மைக்குள் அமுங்கி பிற்போக்குத்தனங்களைக் கொண்ட புதிய அதிகார வர்க்கங்களின் பிடிக்குள் ஈழவிடுதலையானது சென்றுவிடக்கூடாது. மாறாக எம் சமூகத்தில் காணப்படும் தனியுடமை சமூக அமைப்பு தோற்றுவித்த சமூக ஒடுக்குமுறை, பெண்ஒடுக்குமுறை, ஏற்றதாழ்வு போன்ற உள்ளக முரண்பாடுகளையும், அதன் போலித்தனங்களையும் களைந்து ஒரு புரட்சிகர ஈழத்தை படைக்கவேண்டும் என்பதற்காக "EROS" ஆனது தனது அரசியல் பணிகளை அதன் ஸ்தாபகர் இரட்ணசபாபதி அவர்களின் கருத்திற்கமைய ஈழத்தினுள் ஆரம்பித்தது.

## ஈரோஸின் அரசியல் பணிகள்

ஈரோஸின் முதன் முதலானதும், குறிப்பிட்டுச் சொல்லும் படியான அரசியற்பணி வவுனியாவிற்கு அருகில் 'கண்ணாட்டி' என்னுமிடத்தில் 'கூட்டுப்பண்ணை' என்ற வடிவில் விதைக்கப்பட்டது. மாக்சிய, லெனிசிய தத்துவார்த்தத்தை கொள்கையாகக் கொண்ட ஈரோஸ் அமைப்பானது

www.tamilarangam.net

அதன் மாதிரி வடிவத்தை நடைமுறையில் பரீசிலிக்க முயற்சித்தது. அதைத்தொடர்ந்து அரசியல் பணிபுரியும் எமது தோழர்கள் சிறுபண்ணைகளை நிறுவி சீவனப்பாட்டை நிவர்த்தி செய்தல் என்ற தீர்மானத்தை கொள்கையாக ஏற்று ஈழப் பகுதிகளில் செயற்பட்டனர்.

இம்முயற்சிகளில் இருந்து பல்வேறு வகையான படிப்பினைகளையும், அனுபவங்களையும் நடைமுறைரீதியாகக் கற்றுக்கொண்டோம். அவ் அனுபவங்களில் இருந்து சிறந்த ஒழுங்கு முறையைப் பேணவும், கூட்டுழைப்பு வடிவத்தை மென்மேலும் சீர்செய்தல் என்ற விடயமாக நாம் கலந்துரையாடல்களையோ ஆய்வுகளையோ மேற்கொள்வதில் அக்கறையற்றவர்களாக காணப்பட்டோம். இப்பண்ணைகள் மாக்சிய அறிவியலைப் போதிக்கும் பட்டறைகளாக உருவாக்கப்படுவதில் முன்னேற்றகரமான இலக்கை அடையவில்லை என்பதை இம் முப்பதாண்டு நிறைவில் கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

ஈரோஸ் ஆனது எப்போதும் அரசியல் பொருளாதார பிரச்சனைகளை மையப்படுத்தியே மக்களை அரசியல் உணர்வு பெற்றவர்களாக வளர்த்துச் செல்லல் என்ற திட்டத்தையும், அம்மக்கள் மத்தியில் அவர்களின் நலன் சார்ந்தவிடயங்களில் அக்கறையோடும் அர்ப்பணிப்போடும் தத்துவார்த்த தெளிவோடும் ஈடுபடும் உறுப்பினர்கள் அதன் முக்கிய உறுப்பினர்கள் ஆவார்கள் என்ற கருத்தையும் கொண்டிருந்தது.

ஈரோஸின் தத்துவார்த்த ஏடாக 'தர்க்கீகம்' ஈழத்திலிருந்தும் 'பொதுமை' என்ற இதழ் இந்தியாவில் இருந்தும் வெளியிடப்பட்டது.

தொழிலாளர் வர்க்கத்தின் எழிச்சிமிக்க நாளான மேதினத்தை நாம் ஈழப்பகுதியெங்கும் அரசியல் விழிப்புணர்வூட்டும் முற்போக்குவிழாவாக முன்னெடுத்தோம்.

1983 களில் ஏற்பட்ட இனக்கலவரமானது தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சனையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்தியத் தலையீட்டைத் தொடர்ந்து நகர்ந்த ஆண்டுகளில் ஈழப்பகுதிகளில் பல்வேறு யுத்த நெருக்கடிகளையும் சிங்கள இராணுவ பொலிஸ் படைகளின் கொடூர ஒடுக்குமுறைகளையும் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கினர்.

ஈரோசானது ஈழப்போராட்டதின் கேந்திரதளமான கிழக்கை நோக்கி தனது அனைத்து இராணுவ வளங்களையும் நகர்த்தியது. சிங்கள

www.tamilarangam.net

இராணுவத்தின் சுதந்திரமான நடமாட்டத்தை எமது வெற்றிகரமான கொரில்லாத் தாக்குதலினால் திக்கு முக்காடச் செய்தோம். படைகளின் நகர்வை கணிசமான அளவு- முகாம்களுக்குள் முடக்கினோம்.

முதலாவது ஈழயுத்தத்தில் நாம் எல்லா அமைப்புக்களையும் விட அதிகமாக எதிரிக்கு எதிரான தாக்குதல்களைத் தொடுத்திருந்தோம். என்றாலும் நாம் எமது இராணுவ ரீதியான நடவடிக்கைகளை அதன் வெற்றி, தோல்வி போன்ற விடயங்களை மென்மேலும் யுத்தத்தில் வெற்றியீட்டக்கூடிய வழிமுறைகளை ஆராயவும் ஆய்வுக்குட்படுத்தவும் தவறியிருந்தோம்.

எதிரி தனது நகர்வை இராணுவ வாகனமும் நடையுமாக மேற்கொண்டபோது கண்ணிவெடித்தாக்குதல்கள் மேற்கொள்வது சிரமமாக இருந்தது. இங்கு நாம் சந்தேகமில்லாத வெற்றிகளை ஈட்டக்கூடியவகையில் எமது அணிகளை பலப்படுத்தாது இருந்தோம். இதற்கு அன்றயை யதார்த்த சூழல் காரணமாக அமைந்தாலும் நாம் இவ்விவகாரமாக அதிகமான அக்கறை செலுத்தி இவ் விடயங்களை பார்க்கத்தவறியிருந்தோம். என்பதுதான் பொருத்தமான விமர்சனம் என கருதுகிறோம்.

## இயக்க மோதல் நிலவிய போது
## EROS இன் நிலைப்பாடு

இயக்கங்களுக்குள்ளே ஏற்பட்ட கருத்து வேற்றுமைகள் மோதலாக வெடித்தபோது ஒன்றையொன்று அழிக்கும் நிலைக்கே இட்டுச்சென்றது. தமிழ் பேசும் மக்களின் போராட்டமானது ஆயுதம் தாங்கிய முனைப்புக் கொண்டதாக நாம் கருதினால் 1984 க்கு பிறகு என்றே கொள்ளவேண்டும். ஆனால் இயக்கங்களின் ஒற்றுமை இரண்டுவருடமே ஒருவாறு நீடித்தது. 1986 ல் புலிகள் அமைப்பு ரெலோ (TELO) லை அழித்தொழித்தது. அப்போது 'மக்களை நேசித்து நடக்க கற்றுக்கொள்ள வேண்டும்' என்ற தலைப்பில் EROS 'ஈழநாட்டில்' 14.5.1986 இல் அறிக்கையை வெளியிட்டது. தொடர்ந்து புலிகளால் புளொட் (PLOT) தடைசெய்யப்பட்ட காலத்தில் 'ஒரு இயக்கம் மற்றொன்றை தடை செய்ய உரிமையில்லை' என்ற தலைப்பில் வீரகேசரியில் 2.11.1986 இல் அறிக்கையை வெளியிட்டது. அதைத் தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எப் (EPRLF) புலிகளால் தாக்கப்பட்டு அழிக்க முற்பட்டபோது 'இயக்கங்களுக்கிடையிலான மோதல் இந்திய தலையீட்டிற்கு வழிவகுக்கும்' என்ற தலைப்பில் 'முரசொலி'யில்

www.tamilarangam.net

15.12.1986 இல் அறிக்கையை வெளியிட்டது.

இம் மூன்று அறிக்கைகளையும் இவ்வெளியீட்டில் இணைந்து இருபது வருடங்களை எட்டப்போகும் இவ்வறிக்கைகளின் நியாயத்தையும், அதன் தீர்க்கதரிசனத்தையும் அன்றைய கசப்பான துயரமிக்க கொடுமையான அனுபவங்களில் இருந்து எந்தவித ஐக்கியத்தையும் படிப்பினையாகக் கற்றுக் கொள்ளாமல் சகோதரப் படுகொலைகள் தொடர்ந்து நடந்தவண்ணமே உள்ளன. எனவே ஈரோஸால் வெளியிடப்பட்ட இவ்வறிக்கைகளை மக்களின் பார்வைக்காக முன்வைப்பது இன்றைய காலத்தில் பொருத்தமானதே என கருதுகிறோம்.




## மக்களை நேசித்து நடக்க கற்றுக்கொள்ள வேண்டும்!

ஈரோஸ் அறிக்கை

''கடந்த காலத்தில் பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நடந்தேறியவற்றை மீள் பரிசீலனை செய்து வரலாற்றைத் திரும்பிப் பார்த்துப் படிப்பதன் ஊடாக ஒவ்வோர் இயக்கமும் தன்னைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும். அப்போது தான் தமிழ் மக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் தகுதியை விடுதலைப் போராளிகள் பெறமுடியும்''

இவ்வாறு ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''விடுதலைக்காக இந்த மண்ணையும் மக்களையும் நேசித்துப் போராடப் புறப்பட்ட இயக்கங்களிடையே அண்மையில் ஏற்பட்ட மோதலானது துர்ப்பாக்கியமான, கசப்பான ஓர் அனுபவமாகும். போராளிகளை வெறுமனே ஆயுதம் தாங்கிய காவலர்கள் என்ற கண்ணோட்டத்தில் மட்டும் அணுகி சமூக மாற்றத்தின் உள் அடக்கத்தைப் புரியாமல் மக்கள் அன்னியப்பட்டிருப்பது போராட்டத்தின் இத்தகைய துர்ப்பாக்கிய சம்பவத் தொடர்ச்சிக்கே வழிவகுக்கும். மக்கள் இன்றைய அரசியல் போராட்டத்தின் சகல விழுமியங்களையும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். வெறுமனே கோஷ்டிச் சண்டைகளை வேடிக்கை பார்ப்பது போலவோ, வெறும் மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் அணுகுவதனாலோ, இன்றைய சிக்கல்கள் தீர்க்கப்படப் போவதில்லை என்பது தெளிவு.

''அண்மைய துரதிஷ்டவசமான, கசப்பான அனுபவங்களிலிருந்தாவது மக்களை நேசித்து மதித்து நடக்கவும் மக்களுடன் ஐக்கியமாகி விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கவும், கற்றுக்கொள்ள வேண்டும். இந்த வகையில் கொலைகாரர்கள் என்றும் கொடுங்குற்றைச் சுமக்காமல் மக்களின் நன்மதிப்பைப் பெறும் நோக்கிலேனும், மனிதாபிமான அடிப்படையில் சரணடைந்த, கைது செய்யப்பட்ட போராளிகள் அனைவரையும் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.''

-ஈழநாடு 11 - 5 - 1986.

www.tamilarangam.net


ஒரு இயக்கம் மற்றென்றை தடைசெய்ய உரிமையில்லை!
இன்றைய நிலையில் இணைந்து செயற்படுவதே அவசியம் என்கிறது ஈரோஸ் இயக்கம்

# இயக்கமோதலின் இன்னொரு கட்டமாக புலிகள் புளொட்டை தடைசெய்த போது...

## ஒரு இயக்கம் மற்றொன்றை தடை செய்ய உரிமையில்லை!

### இன்றைய நிலையில் இணைந்து செயற்படுவதே அவசியம் என்கிறது ஈரோஸ் இயக்கம்

இயக்கங்களைச் செயலிழக்கச் செய்தது யார்? என்ற தலைப்பில் ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. நேற்று முன்தினம் விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில், எந்த விடுதலை அமைப்பும் சக விடுதலை அமைப்பை தடைசெய்யும் உரிமையைப் பெற்றிருக்க முடியாதெனத் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

வன்னிப் பிராந்தியத்தில் தம்மைச் சரணடையுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் வற்புறுத்தியமையால், தமது செயற்பாடுகள் அனைத்தையும் இடை நிறுத்திவிட்டதாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் அறிக்கை விடுத்துள்ளது. விடுதலை அமைப்பானது, போர்க்குணம் கொண்ட மக்கள் கூட்டத்துடன் வேலைத் திட்டங்களினூடாகத் தம்மை இணைத்துக்கொள்ளத் தவறும்போது செயலிழந்து போகும் என்பதே வரலாறாகும். இவ்வகையில் தாமாக செயலிழந்து போகும் தன்மையை நிராகரித்து, செயற்கை முறையில் பலவந்தமாகச் செயலிழக்கச் செய்வதென்பது மக்களினதும் ஏனைய விடுதலை அமைப்புகளினதும் வன்மையான எதிர்ப்பை சம்பாதிக்கச் செய்வதுடன் ஈழப்போராட்டத்தை திசை திருப்பியதாக்கிவிடும்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் தமது பலவீனங்களையும் தங்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களையும் மக்கள் முன்வைத்து விமர்சனம் செய்யாமல், தமது செயற்பாட்டை இடைநிறுத்தம் செய்வதென மேற்கொண்ட தீர்மானமானது ஓர் இயக்கம் இன்னொரு இயக்கத்தின் செயற்பாடுகளைத் தடை செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது என்பதை அங்கீகாரம் செய்வதாகவே அர்த்தப்படுகிறது. இம்முடிவு போராட்ட போக்குக்கு முரணானதும் முற்றிலும் தவறானதுமாகும். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமானது தனது உறுதியற்ற அரசியல் நிலைப்பாடுகளையும் பொருத்தமற்ற இராணுவ திட்டங்களையும் களைவதுடன் உள்ளும் புறமும் நடத்திய படுகொலைகளை விமர்சனம் செய்து மக்கள் முன் வெளிப்படுத்தி புதிய போக்கை கடைப்பிடித்து, போராட்ட சக்தியால் அடையாளம் காட்ட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

அத்துடன் ஈழப்பிரதேசத்தில் பெரும் தொகுதியை எதிரிகள் சூழ்ந்துள்ள நெருக்கடியான இச் சூழ்நிலையில் சகல விடுதலை அமைப்புகளும் அரசின் இராணுவ திட்டங்களை முறியடிக்கும் வகையில் எமக்குள் ஒருவரை மற்றவர் பலவீனப்படுத்த முயலாது இணைந்து நின்று செயற்பட வேண்டுமென்பது கட்டாயமாகும்.

-வீரகேசரி 02-11-1986

www.tamilarangam.net

1986 மார்ச்சில்
புலிகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப். க்கும்
மோதல் ஏற்பட்டபோது...

# இயக்கங்களுக்கிடையிலான மோதல் இந்தியத் தலையீட்டிற்கு வழி வகுக்கும்

நேற்றைய தினத்திலிருந்து உருவாகியுள்ள சூழ்நிலையானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் இடையான மோதலென்பதை உறுதிப்படுத்தியுள்ளது. வாழ்வதற்கான சூழ்நிலையே அற்றுக்கொண்டிருக்கும் ஸ்ரீ லங்கா அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றிணைந்து நிற்க வேண்டிய இயக்கங்கள் தங்களுக்குள் மோதிக்கொள்வதானது மக்கள் நலனையும் போராட்ட முன்னெடுப்பையும் புறக்கணிக்கும் தன்மையையும் வெளிப்படுத்தியுள்ளது என்று ஈரோஸ் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எப். இன் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள பலாத்கார முயற்சியானது அதன் இந்திய நிலைப்பாட்டை முறியடிப்பதற்கானதே என அறிவிக்கப்பட்டுள்ளது. ஈழப் போராட்டத்தில் இந்தியாவின் தலையீடானது இயக்கங்களின் ஐக்கியத்துக்கூடாகவே மட்டுப்படுத்தப்பட்டு வந்தது. இந்நெறிமுறைக்கு புறம்பான தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வந்த அவசர நடவடிக்கையானது அனைத்து விடுதலை இயக்கங்களையும் புறக்கணித்து ஈழ இலட்சியத்தையே முற்றுமுழுதாக கூடிய அளவில் ... இந்தியா செய்வதற்கு வழிவகுத்துள்ளது. ஆகவே தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் முடிவுகளை மீள் பரிசீலனை செய்வது அவசியமானதாகும் என்று இந்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது கையின் நகத்தாலேயே நமது கண்களைக் குத்துவது போன்ற இந் நிகழ்ச்சியிலே மக்கள் ஒன்று திரண்டு தடுக்க வேண்டுமென்பதும் இயக்கங்களின் போக்கை நெறிப்படுத்த வேண்டுமென்பதும் அவசியமானதாகும். அவ்வகையில் இயக்கங்கள் தங்களுக்குள் மோதிக் கொள்கின்றார்களென விலகியிருந்து பார்க்கும் மனோபாவத்தை விட்டுவிட்டு "இயக்க மோதலை தவிருங்கள் ஈழப் போராட்டத்தை தொடருங்கள்" என்ற கோஷத்துடன் அனைத்து மக்களும் ஒன்று திரண்டு தற்போதைய சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டுமென ஈழமக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

முரசொலி 15-12-1986



www.tamilarangam.net

## பெண்விடுதலையும் ஈரோசும்

பெண்கள் எதிர்நோக்கும் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் ஒரு பொதுவுடமை சமூதாய அமைப்பில் இல்லாதொழிக்கப்படும் என்ற கருத்தை ஈரோஸ் அமைப்பானது கொண்டிருந்தது. ஆனால் வர்க்க போராட்ட குணாம்சத்துடன் கூடிய ஒரு பெண்கள் அணியை நாம் உருவாக்குவதில் பின்னடைவாகவே இருந்தோம். அவர்கள் எதிர்நோக்கும் ஆணாதிக்க அடக்குமுறை, தொழில் வாய்ப்பின்மை, சீதனம், ஊதிய ஏற்றத்தாழ்வு, மகப்பேறு உரிமைகள், விதவைகளுக்கான சமூகநல கொடுப்பனவுகள் இல்லாமை போன்ற பிரச்சனைகளை இனம் கண்டு அரசியல் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தக் கூடிய நியாயமான எதிர்ப்பு போராட்டத்தின் பக்கம் அணிசேர்க்கவில்லை என்ற விடயம், சரியான நோக்கோடு எமது அரசியல் பணிகள் திட்டமிடப்படாத குறைபாடென்றே கொள்ள வேண்டும். மக்களை எவ்வாறு புரட்சியின் பக்கம் அணிதிரட்டுவது என்பதில் ஆழமற்ற பார்வையைக் கொண்டிருந்தோம் என்பதை இவ் முப்பதாண்டு நிறைவில் அமைப்புச் சார்ந்த விமர்சனமாக ஏற்றுக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

## மாணவர்களும் ஈரோசும்

மாணவர்கள் புதிய விடயங்களை அறிந்துகொள்தல் என்ற விடயத்தில் மிகக் கூர்மையானவர்கள், ஆர்வமுள்ளவர்கள், துடிப்பானவர்கள் என்பது மாணவசமூகத்தின் சிறப்பான அம்சமாகும்.

ஈரோஸோடும் பல மனித நேயமிக்க துடிப்பான மாணவர்கள் அணிதிரட்டப்பட்டிருந்தனர். ஈரோஸின் முதல் மாணவ அமைப்பானது 'ஈழமாணவ பொதுமன்றம்' என்ற பெயரோடு ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் 1980களில் இம்மாணவ அமைப்பைச் சார்ந்த முக்கியஸ்தர்கள் EPRLF என்ற அமைப்பை ஸ்தாபித்து பிரிந்து சென்றனர். அதன்பிறகு 'மாணவ இளைஞர் மன்றம்' என்ற அமைப்பை ஈரோஸ் ஸ்தாபித்தது. அதில் பல நேசமிக்க, செயல் ஊக்கமுள்ள, மக்களை நேசித்த துடிப்புள்ள மாணவர்களை இணைத்திருந்தது. இம்மாணவ அமைப்பானது மாணவர்களுக்கான வெளியீடாக 'நாங்கள்' என்னும் பத்திரிகையை வெளியிட்டது.

இந்த அரிய, இனிய மாணவர்கள் தத்துவார்த்தப் படிப்புகளில்

www.tamilarangam.net

வளர்ச்சியும், தெளிவும் கொண்டவர்களாக பரிணமிப்பதிற்கான வேலைத்திட்டங்கள் அற்ற நிலையில் சமூக அரசியல் பொருளாதார விஞ்ஞானத்தைப் பற்றிப்பிடித்து உறுதியும், எழுச்சியும் கொள்ள தடம் அற்று காணப்பட்டார்கள் என்ற விடயம் கசப்பான அனுபவமாகும். ஆனாலும் அவர்களில் பலர் நேர்மையான, நீதியான, ஏற்றத்தாழ்வற்ற பொதுவுடமை சமூகத்தை தோற்றுவிக்க ஆதரவும், பங்களிப்பும் வழங்க இன்னும் தயாராகவே உள்ளனர். என்ற உண்மையான விடயத்தை குறிப்பிட்டேயாக வேண்டும்.

அத்தோடு தத்துவார்த்த தவறுகளில் இருந்து படிப்பினையைப் பெற்று புது தெம்புடன் புதிய மாணவ அணி ஈழத்தினுள்ளும் சர்வதேசரீதியாகவும் தோற்றம் பெறும் என நம்புகிறோம்.

## இசுலாமிய மக்களும் ஈரோசும்

ஈரோஸானது இசுலாமிய மக்கள் தமிழ் தேசிய இனத்தின் பிரதான அங்கம் என்ற கருத்தைக் கொண்டிருந்தாலும் அவர்களின் தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களை மதிக்கவும் அதன்படி அணுகவும் கற்றுக் கொண்டிருந்தோம்.

ஈரோஸ் அமைப்போடு பல இசுலாமிய இளைஞர்கள் புத்திஜீவிகள் எனப்பலர் இணைந்தனர். குறிப்பிட்டுச் செல்லும்படியாக மாக்சிய, லெனிசிய தத்துவார்த்தத்தை ஏற்றுக்கொண்ட முற்போக்கானவர்களும் ஈரோஸில் முக்கிய உறுப்பினர்களாக இருந்தனர். அவர்களின் அனைவரதும் வீரமிக்க, உறுதியான இறுதிவரையுமான பங்களிப்பையும் ஈரோஸ் பெற்றிருந்தது என்பதை நாம் நிமிர்ந்து கூற கடமைப்பட்டுள்ளோம். அத்தோடு பல இசுலாமிய சகோதரர்கள் எமக்கு உண்ண உணவும், உறங்க இடமும் தந்து எம்மை பாதுகாத்து விட்டனர் என்பதையும் நாம் எப்போதும் எம் நினைவுகளில் சுமந்துள்ளோம் என்பதை ஈரோஸின் முப்பதாண்டு நிறைவாண்டில் கூற கடமைப்பட்டுள்ளோம்.

www.tamilarangam.net

## மலையக மக்களும் ஈரோசும்

ஈழப்போராட்டத்தின் பலமான போராட்ட சக்தியாக மலைய தோட்டத் தொழிலாளர்களை ஈரோஸ் கருதியது. ஈரோஸ் அமைப்போடு இணைந்துபோராட பல அரசியல் உணர்வுபெற்ற இளைஞர்கள் முன்வந்தனர். மலையக மக்கள் மீதான சுரண்டல் முறையை எதிர்த்து அவர்கள் ஊக்கமிக்க அரசியற்பணிகளையும் அதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டனர். அவர்களின் செயற்பாட்டிற்கு சிகரம் வைத்தாற்போல் 1999 இல் ரதல்ல விளையாட்டரங்கில் முதன்முதலாக மலையகத்தில் நடாத்தப்பட்ட மேதினத்தை குறிப்பிடலாம். அம்மேதினமானது மலையக மக்களைச் சுரண்டிக் கொண்டிருக்கும் பிழைப்புவாத அரசியல் கட்சிகளுக்கு எதிரான அவர்களை அம்பலப்படுத்தி கோசங்களை எழுப்பிய எழிச்சி மிக்க மேதினமாக அமைந்தது.

இன்றைய சூழலில் மலையக மக்களின் வாழ்நிலையானது மிக மோசமான முதலாளித்துவச் சுரண்டல், தனியார் மயப்படுத்தல் போன்ற நெருக்கடிகளையும், பிழைப்புவாத கட்சிகளின் மோசடிகளுக்குள்ளும் சிக்குண்டுள்ளது. எனவே அரசியல் உணர்வு பெற்றதொழிலாளர்வர்க்க அணியொன்றை உருவாக்குவதில் முன்னிற்பது என்பது எம்முன் உள்ள முக்கியமான அரசியல் பணியாகும் என்பதை நாம் மறந்துவிடவில்லை. என்பதை மலையக மக்கள் சார்பாக நாம் தெரிவித்துக் கொள்கிறோம்.

## சிங்கள மக்களும் ஈரோசும்

இலங்கை முதலாளித்துக் கட்சிகளின் ஆட்சி முறைகளால் படுமோசமான பொருளாதார நெருக்கடிகளையும், தொழில் வாய்ப்பின்மைகளையும் சுமந்துள்ள சிங்கள தொழிலாளர் வர்க்கத்தை எமது போராட்டத்தின் நேசசக்திகளாக பார்ப்பது என்ற கொள்கையை நாம் கொண்டுள்ளவர்கள் என்பதை உறுதியாக கூற விழைகின்றோம்.

இனவாதத்தினை எதிர்க்கும் அதேபோல் சுரண்டல் முறையை இல்லாதொழிக்கும் மாக்சிய, லெனிசிய தத்துவார்த்தத்தை கொள்கையாகக் கொள்ளும் உண்மையான சிங்கள சகோதரர்களுடன் எமது அரசியல் தொடர்புகளை வளர்த்தல், முதலாளித்துவ ஆட்சிக்கெதிரான பொதுப்பிரச்சனைகளில் ஒன்றிணைந்து போராடுதல் என்பதை நாம் கொள்கையாகக் கொண்டுள்ளோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 87 யூலை ஒப்பந்தமும் இடைக்கால நிர்வாகமும்

1987 ஆடி (ஜுலை) ஒப்பந்தமும் அதைத் தொடர்ந்த இடைக்கால யோசனைகளும், அதையொட்டிய தீர்வுகளில் நாம் அக்கறையோ, ஆர்வமோ கொண்டிருக்கவில்லை ஏனெனில் இது ஒருவகை பரபரப்பையும் இராணுவ கெடுபிடிகளையும் தற்காலிகமாக ஒத்தி வைக்க உதவலாம். ஆனால் அடித்தள மக்களின் எண்ண அபிலாசைகளையோ, சமூக பொருளாதார விடுதலையையோ தீர்க்கப்போவதில்லை என்பதை உணர்ந்த நாம் இவ்விடயமாக ஆர்வமோ அக்கறையோ கொள்ளப்போவதில்லை என்று தெரிவித்திருந்தோம்.

ஆனால் இடைக்கால நிர்வாக பேரம்பேசுதல் நடந்துகொண்டிருந்தபோது புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் மோதல் நிலைமைகளைத் தொடர்ந்து இந்திய இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையில் சண்டை மூண்டது. இடைக்கால நிர்வாக சபை யோசனை தூக்கியெறியப்பட்டு இந்திய இராணுவத்தின் அனுசரணையுடன் மாகாணசபை தீர்வுத்திட்டம் நடைமுறைக்குவந்தது.

ஈரோஸானது இடைக்கால நிர்வாக சபையில் அங்கம் வகிக்காததைப் போலவே மாகாணசபையிலும் அங்கம் வகிப்பதில்லை என்ற முடிவை மேற்கொண்டோம். எந்தச் சபையானாலும் தமிழ் பேசும் மக்களின் எண்ண அபிலாசைகளையோ, சமூக பொருளாதார விடுதலையையோ, குறிப்பாக மலையக மக்களின் உரிமைகள் வென்றெடுக்கப்பட உதவப் போவதில்லை என்பதால் அவ்வாறான முடிவை நாம் மேற்கொண்டோம்.

இதற்காக மாகாணசபையில் இடம் பிடித்தவர்களினால் நாம் சந்தித்த கொடூரமான கசப்பான, பயங்கரமான எதிர்விளைவுகள் கொஞ்ச நஞ்சமல்ல. மொத்தமாக எமது தோழர்கள் 64 பேர் கொல்லப்பட்டார்கள்.

இந்திய இராணுவமும் எமது தோழர்களைக் கொன்றது. மாகாணசபையில் அங்கம் வகித்தவர்களோடு சேர்ந்து கைது, பயங்கரமான சித்திரவதைகளையும் செய்தது. புலிகள் கூட மூதூர் மாவட்ட ஈரோஸின் இராணுவத்தளபதியும் மக்களை நேசித்த போராளியுமான ஜெகனையும் இன்னும் சிலரையும் கொன்றனர் என்ற விவகாரம் அம்மக்களின் மனங்களை

www.tamilarangam.net

விட்டு நீங்காத நினைவுகளாக இன்னும் நிலைத்துள்ளன.

இவ்வாறாக நாம் ஒடுக்குமுறைகளைச் சந்தித்துக் கொண்டிருந்தபோது 1989 மாசி மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் பங்குபற்றினோம். சுற்றிவளைப்புகளும் கைதுகளும் பழிவாங்கலும் நடந்துகொண்டிருந்தவேளை பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றுவதற்கு கடும் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது. EPRLF, ENDLF, TELO, தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) ஆகிய கட்சிகள் கைகோர்த்து அணிவகுத்து நின்றன. ஈரோஸ் தனது வேட்பாளர்களை தனியாக நிறுத்தியது.

ஆயுதம், பணம், படை எல்லாமிருந்தும் கூட்டுக்கட்சிகள் படுதோல்வியடைந்தன. ஈரோஸ் 13 ஆசனங்களை இலகுவாக வெற்றிகொண்டது. மாகாணசபை ஆட்சி அராஜகத்திற்கு மக்கள் ஆதரவில்லை என்பதை உலகம் அறிந்தது. மக்கள் நலனைப் பேணாதவர்கள் தூக்கிவீசப்படுவார்கள் என்பது நிரூபிக்கப்பட்டது.

## ஈரோஸின் கழுத்திற்கு கத்தி....

இந்திய இராணுவம் இருக்கும் போதே புலிகள் திருமலை, மூதூர், மட்டக்களப்பு, யாழ் பகுதிகளில் எம்மிடம் ஆயுதம் கேட்டு எச்சரிக்கைகளை விட்டுக்கொண்டிருந்தனர். யாழில் இராணுவ விவகாரங்களுக்கு பொறுப்பானவர்கள் கைது செய்யப்பட்டு ஆயுதங்கள் களையப்பட்டன. மூதூர் பகுதியில் நாம் ஆயுதங்களை வழங்கி இருந்தோம். தேவையற்ற மோதல் ஒன்றையும் நெருக்கடியையும் தோற்றுவிக்க நாம் விரும்பவில்லை என்பதால் அவ்வாறு நடந்து கொண்டோம்.

இந்திய இராணுவம் வெளியேறிய கையோடு புலிகள் மட்டக்களப்பு திருமலைப் பகுதிகளில் இயங்கிய எமது அலுவலகங்களில் இருந்த மீதியான ஆயுத தளபாடங்களை அபகரித்துச் சென்றனர். அத்தோடு எமது நூலகம், தொழில் நிலையங்கள், வைத்தியசாலை என்பனவற்றையும் தம்வசமாக்கி கொண்டனர். இந்நடவடிக்கைகளை புலிகள் மேற்கொண்டிருக்கும் போது எம்மைச் சந்திக்க வருமாறு அழைப்பையும் விட்டிருந்தனர்.

ஈரோஸானது புலிகளைச் சந்திப்பதாக முடிவெடுத்திருந்தது. ஈழநாட்டுப் பத்திரிகையில் 02.03.1986ல் ஈரோஸால் வெளியிடப்பட்ட அறிக்கையின் சாராம்சப்படியே மீண்டும் புலிகளோடு உரையாடப்பட்டது.

www.tamilarangam.net

'ஈரோஸ் அமைப்பின் இராணுவ தயாரிப்புகளும் போராட்ட வடிவங்களும் போட்டி அடிப்படையிலோ அல்லது வெற்று விளம்பரத்தின் அடிப்படையிலோ மேற்கொள்ளப்படுவதில்லை. நாங்கள் வகுத்துக்கொண்ட அரசியற் கொள்கை, கருத்துக்களுக்குகேற்ப எங்கள் தனித்துவமான போராட்ட வடிவங்களை முன்னெடுக்கும் அதேசமயத்தில் போராட்டகளத்தில் ஐக்கியத்தின் அவசியத்தையும் உணர்ந்து செயற்படுதல் ஆகும்.'

(ஈழநாடு 02.03.1986)

இச்சாரம்சத்தில்தான் நாம் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளைச் செய்தோம். புலிகள் எல்லாவித எமது ஐக்கியத்திற்கான ஜனநாயக விழுமியங்களை உதாசீனப்படுத்தினார்கள். அவர்கள் இரண்டு முறைக்கு மேல் எம்மிடம் பேசமுற்படவில்லை மாறாக தாமாகவே முதன்முதல் 'ஈழநாதத்தில்' ஈரோஸ் கலைக்கப்பட்டதாக அறிக்கைவிட்டு மகிழ்ந்தார்கள். என்பது திரிக்கப்பட்ட மறைக்கப்பட்ட கசப்பான உண்மையாகும்.

## ஈரோசும் அதன் தலைமையும்

ஈரோஸின் தலைமையானது 1974இல் லண்டனில் அவ்வமைப்பை தோற்றம் பெறச்செய்த ஸ்தாபர்களையும் அதைத்தொடர்ந்து ஈழத்தினுள் அரசியல் உணர்வு பெற்றிருந்த இளைஞர்களையும் உள்ளடக்கியதாக ஆரம்பித்தமையும், 1983 க்கு பின் இந்திய தலையீட்டுக்கு பின்னால் உருவாகிய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு புதிய தோழர்கள் மத்தியகுழுவிற்கு தேர்வாகினர். அதைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தின் வருகைக்கு பின்னால் கடைசியாக மீண்டும் ஒரு முறை மத்தியகுழு விஸ்தரிக்கப்பட்டது. முப்பதிற்கு மேலான அங்கத்தவர்களைக் கொண்டதாக மத்தியகுழு அமைந்தது.

ஒரு மகத்தான பணிக்காக ஸ்தாபன கட்டுமானத்தை பெற்றுக்கொண்ட தலைமையானது அதன் தலைமையை மாக்சிய தத்துவார்த்த ரீதியில் மிகவும் தெளிவுடனும், உறுதியுடனும் திகழ்ந்து எந்த நிலைமைகளிலும் சளையாது முன்னேறுவதே முக்கிய செயற்பாடாகும்.

ஆனால் 1990 இல் ஈரோஸ் இயக்கம் புலிகள் தடையை எதிர்நோக்கியது. இன் நிகழ்வால் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. சிலர் புலிகளோடு தம்மை இணைந்தனர். பலர் ஒதுங்கிக்கொண்டனர். மேலும்

www.tamilarangam.net

சிலர் புலம் பெயர்ந்தும் சென்றனர். அத்தோடு ஈரோஸை கலைத்து விட்டதாக அதன் நிறைவேற்று செயலாளர் பாலக்குமாரன் அறிக்கை வெளியிட்டு காலப்போக்கில் தானும் புலிகளோடு இணைந்து கொண்டதால் சிங்கள இராணுவத்தின் சந்தேகம் வலுவாகி எமது உறுப்பினர்கள் பலரின் உயிரிழப்பிற்கும், கைதுக்கும் காரணமாக அமைந்தது.

இதன் பிறகு ஈரோஸின் முக்கிய தளபதியான சங்கர் அவர்களினால் ஈரோசை முன்னிறுத்த எடுக்கப்பட்ட நிகழ்வுகளும் பல உயிர் இழப்புக்கள் கைதுகள் என்ற கொடுமையைச் சந்தித்தது.

ஈரோஸை புனரமைப்பது என்ற விடயம் தத்துவார்த்த அரசியல் தவறுகளை ஆய்வுக்குட்படுத்தி அதனூடாக புதிய கருத்துக்களை நடைமுறைக்கு இட்டுச்செல்லாமல் வெறுமனே ஒரு தலைப்பட்சமாக பிரச்சனையை கணிப்பிட்டது பெரிய தவறாக முடிந்ததென்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

## 1990 களில் தலைமை சார்ந்த முக்கிய உறுப்பினர்களிடம் வெளிப்பட்ட தத்துவார்த்தப் பிரச்சனைகள்

ஈரோஸின் தலைமையானது தனது அடிப்படைக் கொள்கை சார்ந்து உறுதியான கொள்கைப்பற்று கொண்ட உறுப்பினர்களைப் பெற்றிருந்ததா? அதாவது மாக்சிய அறிவு பெற்றவர்களாக அதன் உறுப்பினர்கள் இருந்தார்களா? என்ற விடயம் மிக கவனமாக பரீசீலிக்கப்பட வேண்டியது தலைமையானது ஒரு அமைப்பின் வேர் போன்றது.

தலைமைக்கான உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் அரசியல் உணர்வூட்டும் பணிபுரிந்து அதனூடாக தமது முற்போக்கு, மக்கள் நலன்சார்ந்த தன்மைகளை வெளிப்படுத்துவதும், அவ்வாறானவர்கள் தலைமைக்கு தெரிவாகுவது என்பதுதான் பொருத்தமான செயற்பாடாகும்.

அவ்வாறான தலைமைதான் மாக்சிய தத்துவார்த்த ரீதியில் மிகவும் தெளிவுடனும் உறுதியுடனும் திகழ்ந்து எந்த நிலைமைகளிலும் சளையாது இலட்சியத்தை கைவிடாது முன்னேறும்.

www.tamilarangam.net

ஆனால் 1990 களில் பின்னால் ஈரோஸின் தலைமை உறுப்பினர்கள் ஏனைய முக்கிய உறுதி நிலையில் எவ்வாறான கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்தினர் என்பதை இம் முப்பதாண்டு நிறைவில் அனைவரோடும் பகிர்ந்து கொள்தல் என்பது மிக இன்றியமையாத விடயம் எனக் கருதுகிறோம்.

ஈரோஸின் மத்தியகுழு, நிறைவேற்றுக்குழு, நிறைவேற்றுச் செயலாளர் என்ற பொறுப்புக்களை வகித்த பாலக்குமாரன் அவர்களிடம் காணப்பட்ட தத்துவார்த்தச் சறுக்கல்களைப் பார்ப்போம்.

அவரது கருத்து ஒருவகையில் இயக்க மறுப்பியலாகவும், கருத்து முதல்வாதத்தை தூக்கி நிறுத்தும் ஒரு தலைப்பட்ச பார்வையை வெளிப்படுத்தியது.

அதாவது 'சுரண்டலை எதிர்க்கும் வர்க்கப் போராட்டத்தை ஏன் ஒரு குறுகியவட்டம் சார்ந்தவர்களே சிந்திக்கின்றனர். மற்றவர்கள் இதைப்பற்றி அக்கறைப்படவில்லையே. அவர்களும் இச் சமூகத்தில்தானே வாழ்கிறார்கள்.'

அவர் இவ்வாறு கூறியதின் அர்த்தம் சிந்தனைகள் புறச்சூழலின் நடைமுறையில் இருந்துதான் உருவாகின்றன என்பதை மறந்து உள்ளுணர்வும் கருத்தும்தான் விளைபயன்களைத் தோற்றுவிக்கின்றன என்ற கருத்துமுதல்வாத பழைமைவாத கருத்தை முன்வைக்க முயற்சிக்கிறார். இக்கருத்தானது மனிதனின் வாழ்க்கையை இறையியல் கோட்பாட்டுக்குள் புதையுண்டு போகக்கூடிய விதமான தன்மையை வெளிப்படுத்துகிறது.

வாழ்க்கையும், இருத்தலுக்கான போராட்டமும், உணர்வால் நிர்ணயிக்கப்படுவதில்லை. எதிர்மாறாக புறச்சூழலின் இயங்கு நிலையில் இருந்துதான் வாழ்கையின் இருத்தலுக்கான போராட்டச் சிந்தனைகள் உருவாகின்றன என்பதுதான் மாக்சிய விஞ்ஞானம் சொல்லும் அறிவியலாகும்.

இச்சிறுபதிப்பில் இவ்விடயமாக நீண்ட விளக்கங்களை கொடுப்பதென்பது முடியாததாகும். என்றாலும் தத்துவார்த்த சறுக்கல்களின் அடிப்படைக் கருத்தை கூறி அதன் விஞ்ஞான தன்மையற்ற பார்வையையும் ஓரளவேனும் இங்கு குறிப்பிடவிளைந்தோம்.

அடுத்ததாக ஈரோஸின் மத்திய குழு உறுப்பினர் பரா என அழைக்கப்படும் பரராசசிங்கம் அவர்களிடம் காணப்பட்ட தத்துவார்த்தச் சறுக்கல்கள் எவ்வாறு வெளிப்பட்டது என்பதைப் பார்ப்போம்.

இது முற்றுமுழுதாக இறயியல் கோட்பாட்டை தூக்கி நிறுத்துவது.

www.tamilarangam.net

அதனூடாக கருத்து முதல்வாத கோட்பாட்டை பாதுகாப்பது என்ற பிற்போக்குத்தனத்தைக் கொண்டதாகும்.

அதாவது 'எந்த விஞ்ஞானம் ஆனாலும் உணவுப் பொருட்களில் இருந்து இரத்தத்தை உருவாக்க முடியுமா?' எனக் கேட்டு தனது மாக்சிய விரோதப் போக்கை நியாயப்படுத்தினார்.

இக்கூற்றானது டார்வினுடைய உயிரினக் கூர்ப்பு ஆய்வைக் கொச்சைப்படுத்தும் அதேவேளை அதனூடாக மனிதனின் முதலாளித்துவ சமூக வாழ்வியல் நெருக்கடிகளான வறுமை போன்ற ஏனைய துன்பங்களுக்கு இறையியல் கோட்பாட்டை முன்னிறுத்தி அதனை சேற்றினுள் புதைப்பதாகும். இது மாக்சிய விஞ்ஞானத்தில் இருந்து விலகியோடும் தன்மை கொண்டதாகும். அதன் அடிப்படையைத் திரிப்பதாகும்.

மனிதனின் உடல் உறுப்புக்கள் உணவுப் பொருட்களை இரத்தமாக மாற்றம் செய்யும் நிகழ்வானது பல கோடி ஆண்டுகளாக உயிரின் உறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களினூடாக சாத்தியமானது என்ற விஞ்ஞான விளக்கம் இந்த மத்திய குழு உறுப்பினருக்கு புரியாமல் போய்விட்டது கசப்பான உண்மையாகும்.

அடுத்ததாக ஈரோஸின் மத்திய குழு உறுப்பினரும் பிரபல முற்போக்கு இலக்கியவாதி என்று தன்னை அழைத்துக்கொள்ளும் சுந்தர் என்பவர் எவ்வாறு மார்க்சிய தத்துவார்த்த சறுக்கலை வெளிப்படுத்தினார் என்பதைப்பார்ப்போம்.

'ஏற்றத் தாழ்வும் சாதியவேறுபாடும், பிற்போக்குத்தளங்களும், நீங்கிய ஒரு ஈழத்தை உருவாக்க வேண்டும்' என முகவுரைகளில் சொன்னவர்தான் சுந்தர். பொருள் முதல்வாதத்தை ஏற்றுக்கொண்டவர் நாம் (ஈரோஸ்) எனவும் முகவுரைகளில் பெருமிதம் கொண்டவர்.

இன்று அப்பட்டமாக மேற்சொன்ன விடயங்களுக்கு எதிராக மாறியுள்ளார். அதாவது சமூகமாற்றம் என்ற கல்லை தான் தூக்கிப்போட விடும்பவில்லை என்று கூறும் அவர் சுரண்டலை நியாயப்படுத்த தன்னலனிலும் அக்கறையும், வெறியும் கொள்ளும் இச்சமூகத்தை நியாயப்படுத்த மேலும் இவ்வாறு கூறுகிறார்.

'என் தோழனே பார் மிருகங்கள் தன் குட்டியை பராமரிப்பதிலும் தான் உண்பதில் மட்டுமே அக்கறை கொண்டிருக்கின்றவையே. இது இயற்கையான தன்மையல்லவா? ' எனக்கேட்பதின் மூலம் ஒரேயடியாக சுரண்டல், சுய நலம், எல்லாம் இயற்கையான குணாம்சங்கள். ஆதலால் சமூக மாற்றத்திற்கான போராட்டம் என்பதெல்லாம் கல்லைப்போல்

www.tamilarangam.net

கடினமான சாத்தியமில்லாத விடயம் எனக் கூறி கருத்து முதல்வாத இறையியல் கோட்பாட்டை திணிக்க முயல்கிறார்.

1990 எமக்கு ஒரு படிப்பினை தலைமை சார்ந்த உறுப்பினர்களின் தத்துவார்த்த குளறுபடிகள், திரிபுகள், தடம்புரளல்கள், சறுக்கல்கள், போன்ற தன்மைகளை வெளிப்படுத்தி தங்களது போலி முகமூடிகளை அவர்களே கிழித்தனர். பதினைந்து ஆண்டுகளாக போட்ட கும்பலில கோவிந்தா கோசம் கலைந்து கார்ல் மாக்ஸ் எந்த திரிபுகளுக்கு, குளறுபடிகளுக்கு, திருத்தங்களுக்கு, எதிராகப் போராடி விஞ்ஞான உண்மையை நிருபித்தாரோ அதையொத்த கருத்துக்களை வெளிப்படுத்தி அவற்றை தூக்கி நிறுத்த எடுத்த முயற்சிகள் அம்பலமாகி எள்ளிநகையாடும் அளவிற்கு அவர்கள் தத்துவார்த்த ரீதியாக சீரழிவிற்குச் சென்றார்கள்.

இந்த கசப்பான ஒரு தலைப்பட்சமான குறுகிய பார்வையை விமர்சித்தும் மாக்சிய விஞ்ஞானம் சொல்லும் நேர்மையான, நியாயமான உண்மைகளின் அடிப்படையில் மென்மேலும் விமர்சனம், விவாதங்கள் போன்றவற்றினூடாக தெளிவுகளை உள்வாங்கி கற்றுக் கொண்டிருக்கும் மனிதநேயமிக்க தோழர்களை ஈரோஸ் இன்னும் இழந்துவிடவில்லை என்பதையும் குறிப்பிடுகிறோம்.

அதேபோல் ஈழத்து அரசியலின் சிக்கலை அதன் பிரச்சனையை ஒரு தலைப்பட்சமாகவும் பக்கசார்பும் கொண்டு பார்க்காமல் அதன் வேர் வரை ஊடறுத்துச்சென்று பார்க்கும் நேர்மையான உறுப்பினர்களையும் ஈரோஸ் இழந்துவிடவில்லை என்பதும் மகிழ்ச்சியான விடயமேயாகும் என்பதை இம் முப்பதாண்டு அறிக்கையில் குறிப்பிடுவதோடு இம்முப்பதாண்டு நிறைவு அறிக்கையை மக்களோடும், மனிதநேயமிக்கவர்களோடும் இலங்கையின் ஜனநாயக சக்திகளோடும், சமூகமாற்றத்தை விரும்பும் புரட்சியாளர்களோடும் பகிர்ந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் இவ்வறிக்கை பற்றிய விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் முற்போக்கான விஞ்ஞான சிந்தனை அடிப்படையில் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

இவ்வண்ணம்

**வெளியீட்டுக்குழு**

**ஈழப்புரட்சியமைப்பு** (EROS)

'அனைத்து தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'

---

தொடர்பு முகவரி :- EELAMEROS@yahoo.uk



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**எமது பிரகடனங்களில் இருந்து ....**

ஈழப்புரட்சி அமைப்பானது அடிப்படையில் முதலாளியம், அதன் உச்சகட்டமான ஏகாதிபத்தியத்தை வன்மையாக எதிர்க்கும். நாங்கள் சாதி, மத, நிற இனவெறி, நவகுடியேற்றவாதம் போன்றவற்றின் பரம எதிரிகளாவோம். அதேசமயம் தமது விடிவிற்காக போராடும் சர்வதேச, புரட்சிகர விடுதலை இயக்கங்களின் பங்காளர்களாவோம்.

மனிதனை மனிதன் சுரண்டும் முறை நீக்கப்படும் வழியான சோசலிசத்தின் வெற்றியே உலக மக்களின் வெற்றியாகும்.

அரசியல் பிரகடனங்களின்
இறுதி வாக்கியம் (EROS)

★

www.tamilarangam.net

**நாம் ஈழவர் நமது மொழி தமிழ் நம்நாடு ஈழம்**

ஈழப்புரட்சிஅமைப்பு EROS
EELAM REVOLUTIONARY ORGANISATION

01.05.2006